# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
# குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 05–07–2017 ம் தேதி புதன்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருள் மற்றும் தீர்மானம்**

92–வது வாவுபலி பொருட்காட்சியின் 04–07–2017–ம் தேதிய நடைபெற்ற ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு கேட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | இனம் | 2014–15ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | 2015–16ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | 2016–17ம் ஆண்டில் முடிவு செய்யப்பட்ட உச்ச தொகை ரூபாய் | தற்போதைய ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி | | | இந்த ஆண்டின் அதிக தொகை ரூபாய் |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | பெயர் | ஏலத் தொகை ரூபாய் | ஒப்பந்தப் புள்ளி தொகை ரூபாய் | |
| 1 | ஒலிபெருக்கியில் விளம்பரம் செய்யும் உரிமம் | 1400000 | 1100100 | 12,51,000 | 1) ஆர். ராஜநாத்<br>2) தே. ராஜேஷ்மேசிய தாஸ்<br>3) எ. ஜாண்லாறன்ஸ் | –<br>–<br>– | 560000<br>700000<br>705000 | |
| 2 | ஐஸ் மற்றும் ஐஸ்கிரீம் விற்பனை உரிமம் | 529000 | 613000 | 7,00,000 | 1) பி. மோகன்ராஜ்<br>2) எ. முத்துக்குட்டி | –<br>– | 540000<br>614500 | |
| 3 | கூல்டிறிங்க்ஸ் விற்பனை | 136000 | 151000 | 2,00,000 | 1) பி. மோகன்ராஜ்<br>2) R. அந்தோணி செல்வம் | –<br>– | 179100<br>180000 | |
| 4 | பொருட்காட்சி திடல் கடை எண். 4 | 37200 | 38000 | – | ஸ்ரீகாந்த் | – | 38500 | |

அ.கு.:– வரிசை எண்.1–க்கு மூன்றுநபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். அதில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எ. ஜாண்லாறன்ஸ் என்பவரின் தொகை ரூ.7,05,000/– மூன்று ஆண்டு சராசரி தொகையான ரூ.12,50,366/– விட குறைவாகவும் கடந்த ஆண்டு குத்தகை தொகையான ரூ.12,51,000/– விட குறைவாக உள்ளது. மேலும் இது நான்காவது முறை ஒப்பந்தப்புள்ளி ஆகும். மன்றத்தின் பார்வைக்கு

வரிசை எண்.2–க்கு இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். அதில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எ. முத்துக்குட்டி என்பவரின் தொகை ரூ.6,14,500/– கடந்த ஆண்டு குத்தகை தொகையான ரூ.7,00,000/–தைவிட குறைவாகவும் மூன்று ஆண்டு சராசரி தொகையான ரூ.6,14,000/– விட கூடுதலாக இருப்பதால் மன்றத்தின் பார்வைக்கு.

வரிசை எண்.3–க்கு இரண்டு நபர்கள் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார்கள். அதில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.ஆர். அந்தோணிசெல்வம் என்பவரின் குத்தகை தொகை

ரூ.1,80,000/– கடந்த வருட குத்தகை தொகையினை விட குறைவாகவும், மூன்று ஆண்டு சராசரி தொகையான ரூ.1,62,333/– விட கூடுதலாக உள்ளதால் மன்றத்தின் பார்வைக்கு.

வரிசை எண்.4–க்கு ஒருநபர் மட்டும் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளார். மேற்படி கடை கடந்த வருடம் குத்தகைக்கு போகவில்லை. 90–வது வாவுபலி பொருட்காட்சியில் குத்தகை தொகை ரூ.38,000/–க்கு விடப்பட்டுள்ளது. தற்போது மேற்படி கடை ரூ.38,500/– ஒருநபர் ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளது. மேலும் இருவரை குத்தகைக்கு போகாத இனஙகளுக்கு மறுஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் பார்வைக்கு.

**<u>தீர்மானம் எண்.2929,</u>**

**வரிசை எண்.1–க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியதில், இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதியில் சாலை (மேம்பாலம்) அகலப்படுத்தும் பணி நடைபெறுவதால் மேற்படி வாவுபலி பொருட்காட்சிக்கு மேற்படி இனத்தினை அதிக தொகையான 12,51,000/–க்கு யாருமே கேட்க முன்வராத காரணத்தினாலும் நான்கு முறை ஒப்பந்தப்புள்ளி கோரியும் எதிர்பார்த்த தொகைக்கு யாருமே மேற்படி இனத்தினை அதிக தொகைக்கு ரூ.12,51,000/–க்கு மேல் கேட்க முன்வராத காரணத்தினாலும், மேலும் ஒப்பந்தப்புள்ளி கோர நாட்கள் குறைவானதினாலும், மேலும் நகராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு விடக்கூடாது என்ற அடிப்படை காரணத்தின் அடிப்படையில் நான்காவது முறையாக வரப்பெற்ற உயர்ந்த மதிப்புத் தொகையான ரூ.7,05,000/–ஐ நகராட்சியின் வருவாய் நலன் கருதி அனுமதிக்கப்படுகிறது. வரிசை எண்.2 நான்கு முறை ஒப்பந்தப்புள்ளி கோரியதில் நான்காவது ரூ.6,14,500/–க்கு வரப்பெற்ற தொகை மூன்றாண்டு சராசரி தொகையான ரூ.6,14,000/– கூடுதலான தொகையாக இருப்பதால் அனுமதிக்கப்படுகிறது.**

**வரிசை எண்.3 மூன்றாண்டு சராசரி தொகையான ரூ.1,62,333/– விட கூடுதலாக ரூ.1,80,000/– உள்ளதால் அனுமதிக்கப்படுகிறது. வரிசை எண்.4 அனுமதிக்கப்படுகிறது. ஒரு நபர் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையான ரூ.38,500/– மூன்று வருட சராசரியை விட கூடுதலாக இருப்பதால் அனுமதிக்கலாம்.**

**மேலும் 92–வது வாவுபலி பொருட்காட்சியில் குத்தகைக்கு போகாத இனங்களக்கு மறுஏலம்/ மறு ஒப்பந்தப்புள்ளி கோர கால அவகாசம் இல்லாததாலும், வாவுபலி பொருட்காட்சி 14–7–2017 அன்று தொடங்க வேண்டியுள்ளதால் குத்தகைக்கு போகாத இனங்களுக்கு மூன்று வருட சராசரித் தொகையை விட அதிகமாகவும் கடந்த ஆண்டு குத்தகை தொகையை விட அதிகமாகவும் கேட்டு வரும் விண்ணங்களுக்கு தொகையினை கஜனாவில் செலுத்திய பின்பு உரிமம் வழங்கவும் மற்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

## குழித்துறை நகர் மன்றத்தின் 30–07–2017 ம் தேதி புதன்கிழமை நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள்

பொருள் எண். 1

குழித்துறை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.C. விஜயகுமார் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட EMD, F.S.D தொகைகள் (2005–ம் ஆண்டு முதல் 2010 வரை) ரூ.70,990/– காலங்கடந்த தொகைளாக உள்ளதால் மேற்படி தொகையினை திரு.C. விஜயகுமார் ஒப்பந்ததாரருக்கு திருப்பி வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண்.2930**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சியில் திரு.P. ஜெயராஜன் ஒப்பந்ததாரரால் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகள் (2005–ம் ஆண்டு முதல் 2011 வரை) ரூ.1,56,000/– காலங்கடந்த தொகைளாக உள்ளதால் மேற்படி தொகைகளை திருப்பி வழஙகிட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் எண்.2931**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.D. ஜஸ்டின்குமார் 2006–ம் ஆண்டு முதல் 2011–ம் ஆண்டு வரையிலும் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்டுள்ள EMD மற்றும் F.S.D, P.S.D. தொகைகள் திருப்பி வழஙகப்படாமல் காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளது. மேற்படி காலங்கடந்த வைப்புத்தொகை ரூ.4,80,694/–ஐ திரு.D. ஜஸ்டின்குமார்–க்கு திருப்பி வழஙக மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் எண்.2932**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 4

தமிழக அரசின் ஓராண்டு சாதனைகள் மக்களை சென்றடையும் வகையில் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்ய மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கடித எண்.137/செ.ம.தொ.அ/2017, நாள் 12–05–2017–ல் அறிவுறுத்தப்பட்டதன்படி குழித்துறை நகராட்சியின் திட்டப்பணிகள் விளம்பரம் செய்த வகைக்கு மாலை மலர் நாளிதழுக்கு விளம்பரக் கட்டணம் ரூ.8,000/– செலுத்தப்பட வேண்டியுள்ளது. மேற்படி விளம்பரக் கட்டணம் வருவாய் நிதியில் செலுத்திட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் எண்.2933**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 5

குழித்துறை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.K. தேவராஜ் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை 2005–ம் ஆண்டு முதல் 2009 வரையிலானது ரூ.74,295/– காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் மேற்படி தொகையினை திருப்பி வழங்கிட மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண்.2934**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 6

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்ததாரராக இருந்த திரு.R. ஸ்ரீகுமார் என்பவர் செய்து முடிக்கப்பட்ட பணிக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகை 2006–2007–க்கானது ரூ.7,000/– காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் மேற்படி தொகையினை திருப்பி வழங்கிட மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண்.2935**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 7

குழித்துறை நகராட்சியில் ஒப்பந்ததாரராக பணி செய்த திரு.K. கனகராஜ் என்பவர் செய்து முடித்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட தொகை 2005–ம் ஆண்டு முதல் 2011–ம்

ஆண்டு வரையிலானது ரூ.68,248/– காலங்கடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் மேற்படி தொகையினை திருப்பி வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண்.2936**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 8</u>

குழித்துறை நகராட்சி ஒப்பந்ததாரர் திரு.R. சுரேஷ்ராஜ் செய்து முடித்த பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத்தொகைகள் 2005–ம் ஆண்டு முதல் 2008–ம் ஆண்டு வரையிலானது ரூ.34,664/– காலஙகடந்த வைப்புத் தொகையாக உள்ளதால் மேற்படி தொகையினை திரு.R. சுரேஷ்ராஜ்–க்கு திருப்பி வழஙகிட மன்றம் தீர்மானிக்கிறது.

**தீர்மானம் எண்.2937**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 9</u>

தமிழ்நாடு நகரியல் பயிற்சி இயக்குனர் அவர்களது கடித ந.க.எண்.359/2017/அ2, நாள் 07–07–2017 கடிதத்தில் 2017–2018–ம் ஆண்டிற்குரிய நகராட்சி பங்குத் தொகை ரூ.20,000/–க்கு வங்கி வரைவோலை வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி குழித்துறை நகராட்சி பங்குத் தொகை ரூ.20,000/– கோயம்பத்தூர் நகரியல் பயிற்சி மையத்திற்கு அனுப்ப உரிய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.
ந.க.எண்.526/2012/சி1.

**தீர்மானம் எண்.2938**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சியில் கொசு ஒழிப்பு பணிக்கு கூடுதலாக பொது சுகாதார துறையினர் D.D. Health Control, Nagercoil அவர்களின் 10–07–2017–ம் தேதிய ஆய்வு கூட்டத்தில் தினகூலி அடிப்படையில் தலா ரூ.200/– வீதம் 10 பணியாளர்களை நியமிக்கவும் அதற்காகும் செலவினத்தினை பொது நிதியில் செலவு செய்திடவும் மற்றும் டெங்கு காய்ச்சல் நோய் இருப்பதால் நகர சுத்தமாக வைப்பக்கு 7000 கிலோ சுண்ணாம்பு தூள் வாங்கவும், 3000 கிலோ பிளிச்சிங் பவுடர்

வாங்கவும் அதற்காகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து செலவு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண்.2939**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 11

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான ஈப்பு வாகனம் TN 75L.0828-ன் Self Motor பழுதடைந்த காரணத்தினால் மேற்படி வாகனம் இயக்க முடியாத நிலை ஏற்பட்டதால் அவசர அவசியம் கருதி உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வரிசை எண் | நிறுவனத்தின் பெயர் | விலைப்புள்ளி தொகை ரூபாய் |
|---|---|---|
| 1 | மாணிக்கம் பேட்டரி ஒர்க்ஸ், மார்த்தாண்டம் | **4820** |
| 2 | St. ஜாண்ஸ் ஆட்டோ எலக்டிரிக்கல்ஸ், மார்த்தாண்டம் | **4690** |
| 3 | ANS. பேட்டரி சேல்ஸ் & சர்வீஸ், பம்மம், மார்த்தாண்டம் | **4950** |

அ) வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் வரிசை எண்.2, St. ஜாண்ஸ் ஆட்டோ எலக்டிரிக்கல்ஸ் நிறுவனத்தின் குறைவாக விலைப்புள்ளியினை அங்கீகரிக்க மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

ஆ) அவசர அவசியம் கருதி Self Motor பழுது நீக்கம் செய்யப்பட்ட வகைக்கு பட்டியல் தொகை ரூ.4690/– St. ஜாண்ஸ் ஆட்டோ எலக்டிரிக்கல்ஸ் நிறுவனத்திற்கு வழங்குவதற்கும் மன்றம் அனுமதிக்க தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் எண்.2940**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 12

பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016–ன் கீழ் துணை விதிகள்

மத்திய அரசின் சுற்றுப்புறச்சூழல் வனம் மற்றும் பருவ நிலை மாற்றம் துறையின் கீழ் பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016, 18–03–2016 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்படி விதிகளை குழித்துறை நகராட்சியில் திறம்பட செயல்படுத்திட கீழ்காணும் துணை விதிகள் ( Bye-Laws) அங்கீகாரத்திற்காக.

2016–ம் வருடாத்திய பிளாஸ்டிக் கழிவுகள் மேலாண்மை விதிகளை செயல்படுத்துவது நமது நகராட்சியின் கடமையும் பொறுப்புமாகும்.

துணை விதி : 1

விதி 4(b) ன்படி இந்நகராட்சிப்பகுதிக்குள் மறுசுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக்காலான பைகளையோ, பொருட்களையோ இருப்பு வைத்திருப்பதோ, உணவு மற்றும் குளிர்பானங்களை அடைத்து வைத்து விற்பனை செய்வதோ கூடாது.

துணை விதி : 2

மேலும் இந்நகராட்சி எல்கைக்குள் 50 மைக்ரான் அளவிற்கு குறைவான தடிமனுடைய தூக்குப்பைகளை ( Carry Bags ) மற்றும் பிளாஸ்டிக் பொருட்களை பயன்படுத்தகூடாது.

மீறி பயன்படுத்துபவர்களுக்கு கீழ்காணும் அட்டவணைப்படி அபராதம் விதிக்கப்படும்.

1. தயாரிப்பு மற்றும் மொத்த விற்பனையாளர்களுக்கு – ரூ. 100000/–
2. சில்லறை விற்பனையாளர்களுக்கு – ரூ. 1000/–
3. தனிநபர் உபயோகிப்பவர்களுக்கு – ரூ. 100/–

துணை விதி : 3

விதி 4(e) ன்படி, பிளாஸ்டிக் மூலப்பொருட்களை, பிளாஸ்டிக் உற்பத்தியாளர்களுக்கு மாநில மாசுகட்டுபாட்டு வாரியத்தின் அனுமதியின்றி விற்பனை செய்யக்கூடாது.

இந்நகராட்சி எல்கைக்குள் இவ்வாறு அனுமதியின்றி விற்பனை செய்பவர்களுக்கு அதிக பட்சமான ரூ.100000/– வரை அபராதம் விதிக்கப்படும்.

துணை விதி : 4

விதி 8(1) (b), 2–ன்படி, இந்நகராட்சி எல்கைக்குள் பிளாஸ்டிக் கழிவுகளை உருவாக்கும் அனைத்து குடியிருப்பு மற்றும் வணிக நிறுவனங்கள், பிளாஸ்டிக் கழிவுகளை தனியாகப்பிரித்து நகராட்சி கரிவு சேகரிப்பவரிடமோ வேறு அங்கீகரிக்கப்பட்ட கழிவு சேகரிக்கும் தனி நபரிடமோ நிறுவனத்திடமோ ஒப்படைக்க வேண்டும். அவ்வாறு பிளாஸ்டிக் கழிவுகளை தனியாகப்பிரித்து வழங்காத குடியிருப்புகளுக்கு தலா ரூ.25/–ம், வணிக நிறுவனங்களுக்கு ரூ.50/–ம் அபராதம் வசூலிக்கப்படும்.

துணை விதி : 5

மேலும் மேற்படி பிரிவுகளின்படி பிளாஸ்டிக் கழிவுகளை தெருக்களில் எறிவதோ கொட்டப்படுவதோ கூடாது. அவ்வாறு செய்தால் ரூ.100 முதல் ரூ.1000/– வரை அபராதம் விதிக்கப்படும்.

துணை விதி : 6

விதி 8(3)–ன்படி இந்நகராட்சிப்பகுதிக்குள் வசிக்கும் கழிவுகளை உருவாக்கும் அனைவரும் பிளாஸ்டிக் மேலாண்மை பணிகளுக்காக உபயோகிப்பாளர் கட்டணம் கீழ்கண்டவாறு மாதந்தோறும் நகராட்சிக்கு செலுத்த வேண்டும்.

1. குடியிருப்புகளுக்கு – ரூ.10/– முதல் ரூ.40/– வரை
2. வணிக நிறுவனங்களுக்கு – ரூ.50/– முதல் ரூ.900/– வரை

திடக்கழிவுகள் மேலாண்மை விதிகள் 2016–ன்கீழ் உபயோகிப்பாளர் கட்டணம் செலுத்துபவர்கள் மேற்கண்ட தொகை செலுத்தத் தேவையில்லை.

துணை விதி : 7

விதி 9(2)—ன் படி வியாபாரக்குறியீடுடைய உரிமையாளர்களால் பயன்பாட்டாளர்களுக்கு விற்பனை செய்யப்படும் பல்லடுக்கு பிளாஸ்டிக் கவர்கள் மற்றும் உணவு, பால் மற்றும் குடிநீரை அடைக்கப்பயன்படும் பயன்படுத்திய சாச்செட், பவுச்சுக்களை ( Sachets, Pouches) திரும்ப சேகரிக்கும் அமைப்பினை உடன் ஏற்படுத்திட வேண்டும். இத்திட்டத்தினை செயல்படுத்திட மாநில மாசுகட்டுபாட்டு வாரியத்திடமிருந்து அனுமதி பெற வேண்டும்.

துணை விதி : 8

விதி 11(1)—ன் படி இந்நகராட்சி எல்லைக்குள் விற்பனை செய்யப்படும் பிளாஸ்டிக் கைப்பைகள் மற்றும் பல்லடுக்கு பிளாஸ்டிக் கவர்கள் ஒவ்வொன்றிற்கும் உற்பத்தியாளர் பெயர், பதிவு எண் மற்றம் தடிமன் ( Thickness) குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறு இல்லாத பிளாஸ்டிக் பொருட்கள் பறிமுதல் செய்யப்படுவதுடன் துணை விதி 1—ன்படி ரிய அபராதம் விதிக்கப்படும்.

துணை விதி : 9

விதி 15(1)—ன் படி, 50 மைக்ரான் அளவிற்கு அதிகமான தடிமனுடைய் பிளாஸ்டிக் பொருட்களை விற்பனை செய்ய விரும்பும் கடை உரிமையாளர்கள் மற்றும் சாலையோர வியாபாரிகள் இந்நகராட்சியில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இதற்கானப் பதிவுக் கட்டணமாக மாதம் குறைந்த பட்சமாக ரூ.4000/— செலுத்தப்பட வேண்டும்.

பதிவுக்கட்டணம் செலுத்தி நகராட்சியில் பதிவு செய்து கொண்ட கடை உரிமையாளர்கள் மற்றும் சாலையோர வியாாரிகள் மட்டுமே மேற்படி அளவுள்ள (50 மைக்ரான்க்கு மேல்) பிளாஸ்டிக் பொருட்களை இந்நகராட்சிப்பகுதிக்குள் விற்பனை செய்ய தகுதியானவர்களாவர்.

துணை விதி : 10

விதி 16(1)—ல் குறிப்பிட்டுள்ளபடி மாநில கண்காணிப்புக்குழுவைப் போன்று இந்நகராட்சிப்பகுதிக்குள் பிளாஸ்டிக் மேலாண்மை விதிகள் 2016—ஐ செயல்படுத்திட நகர கண்காணிப்புக்குழு கீழ்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ளது.

1. மாவட்ட ஆட்சியர் — தலைவர்
2. நகராட்சி ஆணையாளர், குழித்துறை — கன்வீனர்
3. வருவாய் கோட்டாட்சியர் — உறுப்பினர் செயலர்
4. மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் — உறுப்பினர்
5. விற்பனை வரி அலுவலர் — உறுப்பினர்
6. அரசு சாரா நிறுவன பிரதிநிதி — உறுப்பினர்
7. பிளாஸ்டிக் உற்பத்தியாளர் சங்க தலைவர்/ செயலர் — உறுப்பினர்

மேற்குறிப்பிட்டுள்ள கண்காணிப்புக்குழுவின் கண்காணிப்பின்கீழ் பிளாஸ்டிக் மேலாண்மை விதிகள் 2016—ன் கீழான இந்நகராட்சி துணை விதிகளின்படி 2017 ஜீலை மாதம் முதல் திங்கள் அமுலுக்கு வருகிறது.

**தீர்மானம் எண்.2941**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 13</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் கருங்கல் சாலை பழைய கடை எண்.35 வரிவிதிப்பு எண்.200745, திரு.P. முத்து என்பவர் உரிமம் பெற்று கடை நடத்தி வருகிறார்.

தற்போது அன்னாரின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் கூட்டுவியாபாரம் செய்து வந்த திரு.M. கனகமணி என்பவர் பெயருக்கு பெயர் மாற்றம் செய்யப்பட்டு விண்ணப்பம் கோரியுள்ளார்.

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை (நிலை) எண்.92, நாள் 3–7–2007–ல் அனுமதியற்ற அனுபேகதாரர்களின் நேர்வில் அல்லது வாரிசுதாரர்களின் அடிப்படையில் ஒருமுறை மட்டும் சலுவை அடிப்படையில் குத்தகை உரிமத்தினை அவர்களுடைய பெயரில் பெயர் மாற்றம் செய்து கொள்ளலாம் எனவும் அதற்காகும் விண்ணப்பத்துடன் 12 மாதங்களுக்குரிய மாதாந்திர குத்தகைக்கு சமமான தொகையினை முன்பணமாக பெற வேண்டும் எனவும் பெயர் மாற்றக் கட்டணம் பெற்று பெயர் மாற்றம் செய்து கொடுக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்படி மேற்கண்ட குத்தகை உரிமம் கடை வரிவிதிப்பு எண்.200745–ன் திரு.P. முத்து என்பவர் பெயரிலிருந்து திரு.M. கனகமணி என்பவர் பெயருக்கு விண்ணப்பம் கொடுத்துள்ளதின் அடிப்படையிலும், அரசாணை கட்டணங்கள் பெற்று கடை உரிமத்தினை பெயர் மாற்றம் செய்ய மன்றம் அனுமதிக்கப்படுகிறது.

**தீர்மானம் எண்.2942**
**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/–
தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
குழித்துறை நகராட்சி.

/உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.